ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2475/24 - 2026 පෙබරවාරි මස 11 වැනි බදාදා - 2026.02.11

2475/24 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இலக்கம்: DIVE/LND/ACQUI/5/10.
காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்.: 4-3/11/2022/CEB/72.

ஒரு பகிரங்கத் தேவைக்கு (எரிசக்தி முறைமையினை நம்பகத் தன்மையை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் கொ.வோ.220/132 வஹறு துணை மின் நிலைய மொன்றை நிர்மாணிப்பதற்காக காணி எடுத்தல்) வேண்டியதாயிருக்கின்ற கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் திருத்தச் சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவில் 869 ஆம் இலக்க வீரம்புகெதர கிராம அலுவலர் பிரிவில் நாவாஹேனேகெதர கிராமத்தில் நில அளவையாளர் நாயகத்திற்குப் பதிலாக குருநாகல் மாவட்ட சிரேஷ்ட நில அளவையாளர் நாயகம் அவர்களால் தயார் படுத்தப்பட்ட 2025.12.09 ஆந் திகதிய 420267 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் 9.8454 ஹெக்டயார் விஸ்தீரணத்தையுடைய கீழ் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 1 - காணியின் பெயர்: பம்பேவத்த, பம்பேவெல, நேத்திரன்முல்ல வத்த அல்லது மெல்லகொல்லேஹேன; விபரம்: தோட்டம், சுமார் 20 - 25 வருடங்களையுடைய தென்னைப் பயிர்ச்செய்கை மற்றும் நிரந்தரக் கட்டடமொன்று என்பன இருக்கின்றன; உரிமை கோருபவர்: வரையறுக்கப்பட்ட எஸ். கே. இன்வெஸ்ட்மன்ட் சொலியூஷன்ஸ் தனியார் கம்பனி, இலக்கம் 96, புத்தளம் வீதி, குருநாகல்; விஸ்தீரணம்: 9.8454 ஹெக்டயார் (24 ஏக்கர், 01 றூட் , 12.6 பேர்ச்)**

வடக்கு: ஆ.வ. 895 இல் 12 ஆம் இலக்க காணித் துண்டின் ஒரு பகுதி, உ.வ. 220109 இன் ஒரு பகுதி மற்றும் பிரதேச சபைப் பாதை; கிழக்கு: பிரதேச

சபைப் பாதை, கால்வாய், ஆ.வ.கு. 1755 இல் 1 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் ஆ.வ. 82 இல் 4 (உ.வ. 267759) ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி; தெற்கு: கால்வாய், ஆ.வ.கு. 1755 இல் 1 ஆம் இலக்க காணித்துண்டு, ஆ.வ. 82 இல் 4 (உ.வ. 267759) ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி, ஆ.வ. 82 இல் 8 (உ.வ. 256561) ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி மற்றும் ஆ.வ.கு. 1092 இல் 22, 23, 26, 27, 30, 31 ஆம் இலக்க காணித்துண்டுகள்; மேற்கு: 1092 இல் 22, 23, 26, 27, 30, 31 ஆம் இலக்க காணித்துண்டுகள் மற்றும் 895 இல் 12 ஆம் இலக்க காணித்துண்டின் ஒரு பகுதி.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வீரம்புகெதர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜே. ஜி. ஜி. அயோமி வீரவர்தன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
வீரம்புகெதர.

பிரதேச செயலகம்,
வீரம்புகெதர,
2026, பெப்புருவரி 10.

EOG 02 - 0097